# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

# மானியக் கோரிக்கை எண். 9

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2016–2017

**முன்னுரை**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பினரை கல்வி மற்றும் பொருளாதாரரீதியாக மேம்படுத்தி, அவர்களை சமூக பின்னடைவிலிருந்து விடுவிக்க இவ்வரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கல்வி, சமுதாய முன்னேற்றத்திற்கு அடிப்படைத்தேவை என்பதால், கல்வி முன்னேற்றத்திற்கு இவ்வரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. இச்சமூக மாணவ, மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்காக விடுதி வசதிகள் ஏற்படுத்தித் தருதல், கல்வி உதவித்தொகை வழங்குதல், பரிசுகள் வழங்குதல், பிரமலைக் கள்ளர் இனத்தவர் மேம்பாட்டிற்காக கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் நடத்துதல், மிதிவண்டிகள் வழங்குதல் போன்ற திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. அதேபோல்,

இச்சமூக ஏழை மக்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கு தையல் இயந்திரங்கள் வழங்குதல், சலவைப் பெட்டிகள் வழங்குதல், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் சுயதொழில் துவங்க கடனுதவி வழங்குதல், போன்ற திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கான நிதி உதவி வழங்குதல், ஹஜ் புனித பயணத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல் போன்ற பல்வேறு நலத்திட்டங்களையும் அரசு செயல்படுத்தி வருகிறது.

## 2. இடஒதுக்கீடு

அரசு பணிகளில் நியமனங்கள் மற்றும் கல்வி நிலையங்களில் மாணவ, மாணவியர் சேர்க்கை ஆகியவற்றிற்கான இடஒதுக்கீடு கொள்கையினை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. 1921 ஆம் ஆண்டு முதல் இடஒதுக்கீட்டுக் கொள்கை தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் இப்பிரிவு மக்கள் கணிசமான முன்னேற்றம் அடைய இட ஒதுக்கீட்டுக் கொள்கை முக்கியமான பங்களித்து வருகிறது. தமிழ்நாட்டின் மொத்த

மக்கள் தொகையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மக்கள் மூன்றில் இரண்டு பங்கிற்கும் மேல் இருப்பதால், இடஒதுக்கீட்டின் அளவு படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்போது **69** விழுக்காடு இடஒதுக்கீடு பின்வருமாறு நடைமுறையில் இருந்து வருகிறது.

| **வ. எண்.** | **பிரிவு** | **இடஒதுக்கீடு விழுக்காடு** |
|---|---|---|
| 1 | பிற்படுத்தப்பட்டோர் | **26.5** |
| 2 | பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு முஸ்லீம்கள் | **3.5** |
| 3 | மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் | **20** |
| 4 | ஆதிதிராவிடர் | **18** |
| 5 | பழங்குடியினர் | **1** |
| **மொத்தம்** | | **69** |

இந்திரா சஹானி எதிர் மைய அரசு வழக்கில் **(**மண்டல் குழு வழக்குகள்**)** இடஒதுக்கீட்டினை **50** விழுக்காடு என்ற அளவிற்கு கட்டுப்படுத்தி இந்திய உச்சநீதிமன்ற அரசமைப்பு நீதியர் ஆயம் தீர்ப்பு அளித்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, **69** விழுக்காடு இடஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்தும் பொருட்டு **1993** ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு **(**கல்வி நிலையங்களில் இடங்களையும், மாநில அரசின் கீழ் வரும்

பணிகளில் நியமனங்கள் அல்லது இடங்களை ஒதுக்கீடு செய்தல்) சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 45/1994) நிறைவேற்றியது. பின்னர், அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 31–பி–இன் கீழ் பாதுகாப்பு பெறும் பொருட்டு தமிழ்நாடு சட்டம் 45/1994 இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டது.

தமிழ்நாடு சட்டம் 45/1994–ன் செல்லுந்தன்மையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் மீது 13.07.2010 அன்று உச்சநீதிமன்றம் எண்ணிக்கை அடிப்படையிலான விவரங்களை மாநில அரசு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு அளிக்க வேண்டும் என்றும், அவ்விவரங்களின் அடிப்படையில் மாநிலத்தில் உள்ள பல்வேறு பிரிவினருக்கும் வழங்கப்பட வேண்டிய இடஒதுக்கீட்டின் அளவினை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் முடிவு செய்ய வேண்டுமென்றும் தீர்ப்பளித்தது. மாநில அரசால் வழங்கப்பட்ட எண்ணிக்கை அடிப்படையிலான விவரங்களை ஆய்வு செய்த தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டின் அளவு சரியென பரிந்துரை அளித்தது.

ஆணையம் அளித்த பரிந்துரையினை அரசு ஏற்றுக் கொண்டு கல்வி நிலையங்களில் மாணவ, மாணவியர் சேர்க்கை மற்றும் மாநில அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்கள் ஆகியவற்றில் வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் **69** விழுக்காடு இடஒதுக்கீட்டினை உறுதி செய்து **11.07.2011** அன்று அரசாணை வெளியிடப்பட்டது ஒரு வரலாற்று சாதனை நிகழ்வாகும்.

**3. கல்வி**

பொருளாதார முன்னேற்றத்திற்கும், சமுதாய மேம்பாட்டிற்கும் கல்வி மிகவும் இன்றியமையாதது. எனவே பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மக்களின் கல்வி அறிவினை வளர்ப்பதிலும், கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதிலும், இவ்வரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. இத்துறையின் மொத்த வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டில், பெருமளவிலான தொகை இச்சமுதாய மக்களின் கல்வி வளர்ச்சி திட்டங்களுக்காகவே செலவிடப்படுகிறது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியரின் நலனுக்காக மாநிலம் முழுவதும் விடுதிகளையும் மற்றும்

பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் கல்வி முன்னேற்றத்திற்காக மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளையும் அரசு நடத்தி வருகிறது. வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டித்தரும் மிகப்பெரும் திட்டத்தை இவ்வரசு மேற்கொண்டுள்ளது. மேலும், பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் கல்வி உதவித் தொகைகள், சீருடைகள், புத்தகங்கள் மற்றும் மிதிவண்டிகள் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களையும் அரசு செயல்படுத்தி வருகிறது.

## 4. கல்வி உதவித்தொகைத் திட்டங்கள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த ஏழை மாணவ, மாணவியர் தங்களது கல்வியை இடையூறின்றி தொடர, பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் இலவசக் கல்வி ஆகிய மூன்று வகையான கல்வி உதவித்தொகைத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. 2013–2014 ஆம் ஆண்டிலிருந்து, இவ்வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பினை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

**4.1 பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கில வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது. இவை தவிர, தமிழ்வழியில் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.2,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் பட்டதாரி எவருமிருக்கக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கிலவழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் ஆண்டுக்கு ரூ.200 என்ற அளவிலும் மற்றும் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் ஆண்டுக்கு ரூ.250 என்ற அளவிலும் வழங்கப்படுகிறது. மேலும் ஆங்கில வழியில் 10 ஆம் வகுப்பில் பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியரின் தேர்வுக்கட்டணம் மேலே குறிப்பிடப்பட்ட

நிபந்தனைகளுக்குட்பட்டு, அரசுத்தேர்வுகள் இயக்குநருக்கு ஈடு செய்யப்படுகிறது. மேற்கண்ட வகுப்புகளில் ஆங்கிலவழிக் கல்விப் பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் எவ்வித நிபந்தனைகளும் இன்றி பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் அளவிலேயே வழங்கப்படுகிறது. தேர்வு கட்டணம் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி அரசுத்தேர்வுகள் இயக்குநருக்கு ஈடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2015–2016** ஆம் ஆண்டில், **1,01,835** மாணவ, மாணவியருக்கு ரூ.**298.83** இலட்சம் பின்வருமாறு செலவிடப்பட்டுள்ளது.

| பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ / சீம | மொத்தம் |
| **52,736** | **49,099** | **1,01,835** | **154.97** | **143.86** | **298.83** |

**2016–2017** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**159.05** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**159.77** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**318.82** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கில வழியில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது. இவை தவிர, தமிழ்வழியில் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.2,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் பட்டதாரி எவருமிருக்கக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கிலவழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் ஆண்டுக்கு ரூ.500 என்ற அளவில் வழங்கப்படுகிறது. மேலும் ஆங்கில வழியில் 12 ஆம் வகுப்பில் பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியரின் தேர்வுக்கட்டணம் மேலே குறிப்பிடப்பட்ட

நிபந்தனைகளுக்குட்பட்டு, அரசுத்தேர்வுகள் இயக்குநருக்கு ஈடு செய்யப்படுகிறது. மேற்கண்ட வகுப்புகளில் ஆங்கிலவழிக் கல்விப் பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் எவ்வித நிபந்தனைகளும் இன்றி பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் அளவிலேயே வழங்கப்படுகிறது. தேர்வு கட்டணம் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி அரசுத்தேர்வுகள் இயக்குநருக்கு ஈடு செய்யப்படுகிறது.

### 4.3 கல்லூரி மாணவ, மாணவியருக்கான பள்ளி மேற்படிப்பு உதவித்தொகை

பட்டயப் படிப்பு, பட்டமேற்படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு வரை பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு, அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, **2011–2012** ஆம் ஆண்டு வரை பள்ளிமேற்படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் சிறப்புக் கட்டணம், கற்பிப்புக் கட்டணம், புத்தகக் கட்டணம் ஆகியன கல்வி உதவித்தொகை அறிவிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட அளவிலும், தேர்வுக்

கட்டணம் முழுமையாகவும் வழங்கப்பட்டு வந்தது. **2012–2013** ஆம் ஆண்டு முதல் சிறப்புக் கட்டணம், கற்பிப்புக் கட்டணம் அரசு கல்வி நிலையங்களுக்கு நிர்ணயிக்கப்படும் அளவில் வழங்கப்படுகிறது. **2013–2014** ஆம் ஆண்டு முதல் கல்வி உதவித்தொகை பெறுவதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.**1,00,000**–லிருந்து ரூ.**2,00,000**–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இரண்டாவது முறைமாற்றம் (Shift) வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2015–2016** ஆம் ஆண்டில் **2,25,224** மாணவ, மாணவியருக்கு ரூ. **9,844.56** இலட்சம் பின்வருமாறு செலவிடப்பட்டுள்ளது.

| மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
| **1,34,759** | **90,465** | **2,25,224** | **6,592.52** | **3,252.04** | **9,844.56** |

**2016–2017** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**6,425.92** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**3,725.44** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**10,151.36** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. இலவசக் கல்வி

### 5.1 பட்டப்படிப்பு

இத்திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்று ஆண்டு இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு சிறப்புக் கட்டணம், திரும்ப வழங்கப்படாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை அரசு நிர்ணயித்த அளவிலும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் எவ்வித நிபந்தனையும் இன்றி வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் **2015–2016** ஆம் ஆண்டில் **1,70,276** மாணவ, மாணவியருக்கு ரூ. **2,800.73** இலட்சம் பின்வருமாறு செலவிடப்பட்டுள்ளது.

| மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
| **96,298** | **73,978** | **1,70,276** | **1,687.31** | **1,113.42** | **2,800.73** |

**2016–2017** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**1,671.04** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**1,175.97** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**2,847.01** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.2 பட்டயப்படிப்பு

இத்திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnics) பட்டயப் படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு அவர்களது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.2,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டய / பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், திரும்ப வழங்கப்படாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை அரசு நிர்ணயித்த அளவிலும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் **2015–2016** ஆம் ஆண்டில் **14,756** மாணவ, மாணவியருக்கு ரூ. **540.09** இலட்சம் பின்வருமாறு செலவிடப்பட்டுள்ளது.

| மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ /சீம | மொத்தம் | பிவ | மிபிவ /சீம | மொத்தம் |
| **9,193** | **5,563** | **14,756** | **326.27** | **213.82** | **540.09** |

**2016–2017** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**338.99** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர்

மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**275.82** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**614.81** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.3 தொழிற்படிப்பு

இத்திட்டத்தின் கீழ் அரசு, அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் ஒற்றைச் சாளர முறையில் தேர்வு செய்யப்பட்டு தொழிற்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு அவர்களது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.**2,00,000**–க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் அவர்களது குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை அரசு நிர்ணயித்த அளவிலும், தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் **2015–2016** ஆம் ஆண்டில் **1,85,833** மாணவ, மாணவியருக்கு ரூ. **12,682.15** இலட்சம் பின்வருமாறு செலவிடப்பட்டுள்ளது.

| பயனடைந்த மாணவ/மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
| **1,17,282** | **68,551** | **1,85,833** | **8,239.92** | **4,442.23** | **12,682.15** |

**2016–2017** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**8,139.09** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**4,089.16** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**12,228.25** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.4 உண்டி, உறையுள் கட்டணம்

கல்வி நிலையங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப்பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு உண்டி, உறையுள் கட்டணம் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை தொழிற் கல்வி படிப்புகளுக்கு ரூ.**350** ஆகவும், ஐடிஐ / பட்டயப்படிப்பு மற்றும் முதுகலைப் படிப்புகளுக்கு ரூ.**225** ஆகவும், **11** மற்றும் **12** ஆம் வகுப்புகள் மற்றும் இளங்கலை படிப்புகளுக்கு ரூ.**175** ஆகவும் **2013–2014** ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

## 5.5 இணையதளம் மூலம் கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு செய்தல்

கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு தேசிய தகவல் மையத்தால் உருவாக்கப்பட்ட இணையதளம் (www.escholarship.tn.gov.in) மூலம் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2013–2014 ஆம் ஆண்டு முதல் இம்மாணவ, மாணவியரின் கல்வி உதவித் தொகை அவர்களின் வங்கி கணக்கில் நேரடியாக மின்னணு பரிமாற்றம் (ECS) மூலம் வரவு வைக்கப்படுகிறது.

## 6. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த கிராமப்புற பள்ளி மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல்

கிராமப்புறங்களில் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவியருக்கு ஆண்டிற்கு தலா ரூ.500 என்ற அளவிலும், 6 ஆம் வகுப்பு பயிலும் மாணவியருக்கு ஆண்டிற்கு ரூ.1,000 என்ற அளவிலும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. 2012–2013 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு இருமடங்காக ரூ.1,400 இலட்சம் என்ற அளவில் உயர்த்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 2015–2016 ஆம் ஆண்டில் 2,35,288 மாணவியர் பயனடையும் வகையில் ரூ.1,419.78 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2016–2017 ஆம் ஆண்டிற்கு ரூ.1,434.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. விடுதிகள்

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்–பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் எவ்வித இடையூறுமின்றி கல்வி பயில ஏதுவாக 1,338 விடுதிகள் செயல்படுகின்றன. இதில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் 731 விடுதிகளும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் கீழ் 591 விடுதிகளும் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் 16 விடுதிகளும் இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் ஆண்டுதோறும் 84,314 மாணவ, மாணவியர் பயனடைகின்றனர். பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.1,00,000–க்கு மிகாமல் உள்ள மாணவ, மாணவியர் விடுதிகளில் சேர அனுமதிக்கப்படுகின்றனர். விடுதிகளில் மாணவ, மாணவியர் கட்டணம் ஏதுமின்றி தங்கி பயில்கின்றனர். உணவுக்கான செலவினம் முழுவதையும் அரசே ஏற்கிறது.

இவ்விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவியரின் எண்ணிக்கைக்கு கூடுதலாக 10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரைச் சேர்க்க 2011–2012 ஆம் ஆண்டு முதல் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு ஒவ்வொரு விடுதியிலும் 5 இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளன.

2012–2013 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டு கேரள எல்லையோரப் பகுதியில் உள்ள தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளை தேனி மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக, சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு, அதற்குப் பதிலாக, அவர்களின் பெற்றோர் அளிக்கும் சுய உறுதிமொழியின் அடிப்படையில் விடுதிகளில் சேர்க்கப்படுகிறார்கள்.

## 7.1 புதிய விடுதிகள் துவங்குதல்

மாணவ, மாணவியரின் நலனைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் தேவைக்கேற்ப விடுதிகள் துவங்கப்படுகின்றன. 2015–2016 ஆம் ஆண்டில் 10 கல்லூரி

மற்றும் **3** பள்ளி விடுதிகள், **1,150** மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் புதிதாக துவங்கப்பட்டுள்ளன.

**7.2 உணவுக் கட்டணம்**

விடுதி மாணவ, மாணவியருக்கான மாதாந்திர உணவுக் கட்டணத்தை, பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் ஒரு மாணவ/மாணவிக்கு ரூ.**450**–லிருந்து ரூ.**650**–ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் ஒரு மாணவ/மாணவிக்கு ரூ.**550**–லிருந்து ரூ.**750** ஆகவும் **20.09.2011** முதல் அரசு உயர்த்தியுள்ளது. இக்கட்டணத்தை மீண்டும் **1.3.2013** முதல் பள்ளி விடுதிகளுக்கு ரூ.**650**–லிருந்து ரூ.**755**–ஆகவும், கல்லூரி விடுதிகளுக்கு ரூ.**750**–லிருந்து ரூ.**875**–ஆகவும் அரசு மேலும் உயர்த்தியுள்ளது. அதே போல மாதாந்திர பல்வகை செலவினம் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் ஒரு மாணவ/மாணவிக்கு ரூ.**25**–லிருந்து ரூ.**50**–ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் ஒரு மாணவ/மாணவிக்கு ரூ.**35**–லிருந்து ரூ.**75**–ஆகவும் **1.2.2012** முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. **2013–2014** ஆம் ஆண்டு முதல் பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு வழங்குவதற்கான ஒதுக்கீடு பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் ஒரு மாணவ/மாணவிக்கு ரூ.**2**–லிருந்து ரூ.**20**–ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப்

பயிலும் ஒரு மாணவ / மாணவிக்கு ரூ.3–லிருந்து ரூ.40–ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2015–2016** ஆம் ஆண்டில் விடுதிகளின் உணவு கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற செலவினங்களுக்காக **ரூ.19,700.88** இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

**2016–2017** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு **ரூ.13,342.98** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு **ரூ.12,369.85** இலட்சமும் ஆகமொத்தம் **ரூ.25,712.83** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7.3 விடுதி மாணவ, மாணவியர் பெறும் பயன்கள்

1. ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு ஆங்கிலம் மற்றும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.

2. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்குப் பன்னிரெண்டாம் வகுப்பு வரை அனைத்து பாடப்புத்தகங்களும் விலையில்லாமல் பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

3. விடுதிகளில் தங்கிப்பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றிட, அவர்களுக்கு விலையில்லா சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கப்படுகின்றன.

4. 2013–2014 ஆம் ஆண்டு முதல் 4 முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப்பயிலும் மாணவ, மாணவியருக்கு, மதிய உணவு திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படுவதைப் போன்ற நிறம் மற்றும் வடிவமைப்பில் நான்கு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன.

5. விடுதிகளில் வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி, விளையாட்டு சாமான்கள், நீர் சுத்திகரிப்புக்கருவி, புத்தக அலமாரிகள், மாவரைக்கும் இயந்திரம், மின்அரைப்பான், சுகாதார குட்டைத் தகளி, தீயணைப்பான் கருவிகள், இட்லி வேகவைப்பான்கள், நூலகப் புத்தகங்கள் மற்றும் பூச்சி அழிப்பான் மின் கருவி ஆகியன வழங்கப்படுகின்றன. இவற்றுடன் கல்லூரி விடுதிகளுக்கு இன்வர்ட்டர் கருவி, பார்வை குறிப்புப் புத்தகங்கள் மற்றும் இரண்டடுக்கு கட்டில்கள் வழங்கப்படுகின்றன.

6. அனைத்து விடுதி மாணவ, மாணவியருக்கும் பாய்கள், போர்வைகள், எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வழங்கப்படுகின்றன. மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதி மாணவ, மாணவியருக்கு கம்பளி ஆடை வழங்கப்படுகிறது. மாணவ, மாணவியருக்கு ஆண்டுதோறும் பாய்கள் மற்றும் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை போர்வைகள் வழங்குவது 2013–2014 ஆம் ஆண்டு முதல் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

7. அனைத்து விடுதி மற்றும் கள்ளர் சீரமைப்பு பள்ளி மாணவ, மாணவியருக்கு ஆண்டு தோறும் மூன்று மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

8. ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒன்று என்ற வீதத்தில் விடுதி மாணவ, மாணவியருக்கு வாரத்திற்கு ஐந்து நாட்கள் வேகவைத்த முட்டைகள் வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

9. ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் புதன் கிழமைகளில் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும் நான்காம் புதன் கிழமைகளில் கோழி இறைச்சியும் வழங்கப்படுகின்றன.

10. மாலை நேர சிற்றுண்டியாக தினந்தோறும் சுண்டல் மற்றும் சுக்குமல்லி காபி/தேநீர் வழங்கப்படுகின்றன.

11. 2016–2017 மற்றும் 2017–2018 ஆகிய இரண்டு ஆண்டுகளில் அனைத்து விடுதிகளுக்கும் இட்லி குக்கர்–நீராவி கொதிகலன்கள் மற்றும் சலவை இயந்திரங்கள் வழங்கப்படும்.

**8. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம்**

பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.50,000–க்கு மிகாமலிருக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர், அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் விடுதிகளில் தங்கி பயில, மாதம் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 650 வீதம் 10 மாதங்களுக்கு உணவு மானியத்தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2015–2016 ஆம் ஆண்டில் 1,209 மாணவ, மாணவியருக்கு ரூ.78.59 இலட்சம் பின்வருமாறு செலவிடப்பட்டுள்ளது.

| பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/ சீம | மொத்தம் |
| **655** | **554** | **1,209** | **42.59** | **36.00** | **78.59** |

**2016–2017** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**72.22** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**50.00** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**122.22** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9. விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

இத்துறை கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் **1,338** விடுதிகளில், **1,195** விடுதிகள் அரசு கட்டடங்களிலும், மீதமுள்ள **143** விடுதிகள் தனியார் வாடகை கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. இவற்றில் **107** விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. எஞ்சிய **36** விடுதிகளுக்கு சொந்த கட்டடங்கள் கட்டும் பணி **2016–2017** ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். புதிதாகக் கட்டப்படும் விடுதிக் கட்டடங்களில், சூரிய ஒளியின் மூலம் மின்சாரம் தயாரிக்கும் கருவி மற்றும் நீரை சூடாக்கும் கருவி ஆகியன பொருத்தப்படுகின்றன.

**2015–2016** ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகளுக்காக ரூ.**4,328.04** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**2016–2017** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**4,058.07** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**3,294.28** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**7,352.35** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9.1 விடுதி கட்டடங்கள் பராமரிப்பு**

சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளின் பராமரிப்பு பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிகளுக்காக ஆண்டுதோறும் ரூ.**600** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. **2015–2016** ஆம் ஆண்டில் சிறப்பினமாகக் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.**200** இலட்சத்தினையும் சேர்த்து மொத்தம் ரூ.**800** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**10. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்**

பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் கல்வி நிலையினை மேம்படுத்தும் பொருட்டு, அவ்வகுப்பினர் பெருமளவில் வசிக்கும் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை

கட்டுப்பாட்டின் கீழ் 290 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் செயல்படுகின்றன. இதில் 212 தொடக்கப் பள்ளிகள், 23 நடுநிலைப் பள்ளிகள், 22 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 33 மேல்நிலைப் பள்ளிகள் அடங்கும். இப்பள்ளிகளில் மொத்தம் 28,790 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். இம்மாணவ, மாணவியருக்கு அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுவதைப் போன்று, சிறப்பு ஊக்கத் தொகை, காலணி, மடிக்கணினி, புத்தகப்பை, கணித உபகரணப்பெட்டி, வண்ணப் பென்சில்கள் மற்றும் உலக வரைபடப் புத்தகம் ஆகியன பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன. 2015–2016 ஆம் கல்வியாண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளின் தேர்ச்சி விகிதம் முறையே 94.1 விழுக்காடு மற்றும் 90.4 விழுக்காடு ஆகும்.

2011–2012 ஆம் ஆண்டில் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் தலா 5 பள்ளிகள் வீதம் மொத்தம் 15 ஆரம்பப் பள்ளிகளில், ஆங்கில வழி மழலையர் வகுப்புகள் (LKG) தொடங்கப்பட்டன. தற்போது இப்பள்ளிகளில் LKG முதல் மூன்றாம் வகுப்பு வரை ஆங்கில வழி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இவ்வகுப்புகளில் 394 மாணவர்கள் மற்றும் 388 மாணவியர் பயின்று வருகின்றனர்.

**2015–2016** ஆம் ஆண்டிற்கு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் செயல்பாட்டிற்காக ரூ.7,479.97 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**2016–2017** ஆம் ஆண்டிற்கு ரூ.8,451.56 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.1 கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்கள் பராமரிப்பு

கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்காக 2011–2012 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

**2015–2016** ஆம் ஆண்டில் 5 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதலாக ரூ.9.90 இலட்சம் செலவில் தளவாடச் சாமான்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 11. சீருடைகள் வழங்குதல்

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு நான்கு இணை சீருடைகள் சமூக நலத்துறையால் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கி 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ,

மாணவியருக்கும் நான்கு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன. **2013–2014** ஆம் ஆண்டு முதல் இச்சீருடைகள் அவற்றின் வண்ணம் மற்றும் வடிவமைப்பில் மாற்றம் செய்யப்பட்டு பள்ளிகளில் பின்பற்றப்பட்டு வரும் சீருடைகள் போன்றே வழங்கப்படுகின்றன. சீருடைத் துணிகள் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, சமூகநலத் துறையின் கீழ் செயல்படும் மாவட்ட மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தைத்து வழங்கப்படுகின்றன.

**2015–2016** ஆம் ஆண்டில் மொத்தம் **38,698** மாணவ, மாணவியருக்கு ரூ.**355.76** இலட்சம் செலவில் பின்வருமாறு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

| பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/ சீம | மொத்தம் |
| **19,658** | **19,040** | **38,698** | **183.86** | **171.90** | **355.76** |

**2016–2017** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**245.73** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**174.73** இலட்சமும் ஆக மொத்தம் ரூ. **420.46** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12. மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

அரசு, அரசு நிதியுதவி மற்றும் பகுதி நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள விடுதியில் தங்கியுள்ள மற்றும் உண்டி உறைவிடப்பள்ளி மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கப்படுவதில்லை. மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கப்படுவது இணையதளம் (www.agaram.tn.gov.in/freecycles) மூலம் கண்காணிக்கப்படுகிறது.

**2015–2016** ஆம் ஆண்டில் **4,54,571** மாணவ, மாணவியருக்கு ரூ.**16,638.53** இலட்சம் செலவில் பின்வருமாறு மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

| பயனடைந்த மாணவ/மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
| **2,47,131** | **2,07,440** | **4,54,571** | **9,158.18** | **7,480.35** | **16,638.53** |

**2016–2017** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**9,005.32** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**7,277.52** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**16,282.84** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**13. சிறந்த தனியார் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயில்வதற்கு நிதியுதவி வழங்குதல்**

ஒவ்வொரு மாவட்டத்திலும், அரசுப் பள்ளிகளில் **10** ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மூன்று மாணவர்கள், மூன்று மாணவியர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த இரண்டு மாணவர்கள் மற்றும் இரண்டு மாணவியர் தங்கள் விருப்பப்படி, தமிழ்நாட்டிலுள்ள சிறந்த தனியார் பள்ளிகளில் மேல்நிலைக் கல்வி பயில நிதியுதவி வழங்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு ஒருவருக்கு உயரளவாக ரூ.**28,000** வீதம் அதிகபட்சம் இரண்டாண்டுகளுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. **2015–2016** ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற, பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.**1,00,000**–லிருந்து ரூ.**2,00,000** ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**2015–2016** ஆம் ஆண்டில் **642** மாணவ, மாணவியருக்கு ரூ.**145.11** இலட்சம் பின்வருமாறு செலவிடப்பட்டுள்ளது.

| பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
| **378** | **264** | **642** | **88.00** | **57.11** | **145.11** |

**2016–2017** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**107.52** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**67.20** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**174.72** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 14. பரிசுகள் மற்றும் விருதுகள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர் **10** மற்றும் **12** ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறுவதை ஊக்குவிக்கும் பொருட்டு மாநில மற்றும் மாவட்ட அளவில் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### 14.1 மாநில அளவிலான பரிசுகள்

**12** ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த

ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி என நான்கு முதல் பரிசுகள் தலா ரூ.50,000 என்ற அளவிலும், நான்கு இரண்டாம் பரிசுகள் தலா ரூ.30,000 என்ற அளவிலும் மற்றும் நான்கு மூன்றாம் பரிசுகள் தலா ரூ.20,000 என்ற அளவிலும் வழங்கப்படுகின்றன.

அதேபோல் 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி, என நான்கு முதல் பரிசுகள் தலா ரூ.25,000 என்ற அளவிலும், நான்கு இரண்டாம் பரிசுகள் தலா ரூ.20,000 என்ற அளவிலும் மற்றும் நான்கு மூன்றாம் பரிசுகள் தலா ரூ.15,000 என்ற அளவிலும் வழங்கப்படுகின்றன.

### 14.2 மாவட்ட அளவிலான பரிசுகள்

12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி என நான்கு முதல் பரிசுகள் தலா

ரூ.6,000 என்ற அளவிலும், நான்கு இரண்டாம் பரிசுகள் தலா ரூ.4,000 என்ற அளவிலும் மற்றும் நான்கு மூன்றாம் பரிசுகள் தலா ரூ.2,000 என்ற அளவிலும் வழங்கப்படுகின்றன.

அதேபோல் 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி என நான்கு முதல் பரிசுகள் தலா ரூ.3,000 என்ற அளவிலும், நான்கு இரண்டாம் பரிசுகள் தலா ரூ.2,000 என்ற அளவிலும் மற்றும் நான்கு மூன்றாம் பரிசுகள் தலா ரூ.1,000 என்ற அளவிலும் வழங்கப்படுகின்றன.

2015–2016 ஆம் ஆண்டில் 1,311 மாணவ, மாணவியருக்கு ரூ.54.23 இலட்சம் பின்வருமாறு செலவிடப்பட்டுள்ளது.

| பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/ சீம | மொத்தம் |
| 719 | 592 | 1,311 | 35.50 | 18.73 | 54.23 |

2016–2017 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.23.18 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர்

மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.22.25 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.45.43 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 14.3 பேரறிஞர் அண்ணா நினைவு பரிசு

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவில் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முதலாவது மற்றும் இரண்டாவது மதிப்பெண்கள் பெற்று, தொழிற்படிப்புப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவியர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவியருக்கு, ஆண்டுக்கு ரூ.10,000 வீதம் அதிகபட்சம் 5 ஆண்டுகளுக்கு இப்பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

2015–2016 ஆம் ஆண்டில் 1,240 மாணவ, மாணவியருக்கு ரூ.124.00 இலட்சம் பின்வருமாறு செலவிடப்பட்டுள்ளது.

| பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
| **649** | **591** | **1,240** | **64.90** | **59.10** | **124.00** |

**2016–2017** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**65** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**61** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**126** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 14.4 தந்தை பெரியார் நினைவு பரிசு

ஒவ்வொரு மாவட்டத்திலும் **10** ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டயப்படிப்பில் சேர்ந்து பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த **2** மாணவர்கள் மற்றும் **2** மாணவியருக்கும் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த **2** மாணவர்கள் மற்றும் **2** மாணவியருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.**10,000** வீதம் அதிகபட்சம் மூன்று ஆண்டுகளுக்கு இப்பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

**2015–2016** ஆம் ஆண்டில் **781** மாணவ, மாணவியருக்கு ரூ.**78.10** இலட்சம் பின்வருமாறு செலவிடப்பட்டுள்ளது.

| பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
| **404** | **377** | **781** | **40.40** | **37.70** | **78.10** |

**2016–2017** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**43** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**45** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**88** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**14.5 முதலமைச்சரின் தகுதி பரிசுத் திட்டம்**

**2012–2013** ஆம் ஆண்டு முதல் **12** ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த முதல் **500** மாணவர்கள் மற்றும் **500** மாணவியருக்கு அவர்கள் பட்டப்படிப்பு / பட்டயப் படிப்பு / தொழிற்படிப்பு முடிக்கும் காலம்வரை ஆண்டொன்றுக்கு ரூ.**3,000** வீதம் அதிகபட்சம் **5** ஆண்டுகளுக்கு இப்பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2015–2016** ஆம் ஆண்டில் **4,075** மாணவ, மாணவியருக்கு ரூ.**122.25** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**2016–2017** ஆம் ஆண்டிற்கு ரூ.**140** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**14.6 பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் விடுதி மாணவ / மாணவியருக்கு பரிசு வழங்கும் திட்டம்**

பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பிற்கான பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ / மாணவியருக்கும், அதேபோன்று மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பிற்கான பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களை பெறும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியருக்கும் 2011–2012 ஆம் ஆண்டு முதல் தனித்தனியே கீழ்க்கண்டவாறு பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன.

| பரிசு விவரம் | 10 ஆம் வகுப்பு | 12 ஆம் வகுப்பு |
|---|---|---|
| முதல் பரிசு | ரூ.10,000 | ரூ.10,000 |
| இரண்டாம் பரிசு | ரூ.7,000 | ரூ.7,000 |
| மூன்றாம் பரிசு | ரூ.5,000 | ரூ.5,000 |

2015–2016 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த 7 மாணவ, மாணவியருக்கு ரூ.49,000–மும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர்

வகுப்பைச் சார்ந்த **6** மாணவ, மாணவியருக்கு **ரூ.44,000**—மும் செலவிடப்பட்டுள்ளது.

**2016—2017** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு **ரூ.1.40** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு **ரூ.1.20** இலட்சமும் ஆகமொத்தம் **ரூ.2.60** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 14.7 சிறந்த விடுதி காப்பாளர்கள் / காப்பாளினிகளுக்கு மாநில அளவிலான பரிசுகள்

விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர்கள் / காப்பாளினிகளில் ஒட்டு மொத்த சிறந்த செயல்பாட்டிற்காக ஆண்டுதோறும் மாநில அளவில் தேர்வு செய்யப்படுவோருக்கு முதல் பரிசாக **ரூ.5,000**, இரண்டாம் பரிசாக **ரூ.3,000** மற்றும் மூன்றாம் பரிசாக **ரூ.2,000** வழங்கப்பட்டு வருகிறது. **2015—2016** ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் **ரூ.0.10** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**2016—2017** ஆம் ஆண்டிற்கு **ரூ.0.10** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 14.8 கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கும் திட்டம்

10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் உயர் மதிப்பெண்கள் பெறுவோருக்கு பரிசுகள் வழங்கும் இத்திட்டம் 1995 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு முதல் பரிசு, ஒரு இரண்டாம் பரிசு மற்றும் மூன்று மூன்றாம் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வரும் பரிசுத் தொகை 2011–2012 ஆம் கல்வியாண்டு முதல் உயர்த்தப்பட்டு, 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் முதலிடம், இரண்டாமிடம் மற்றும் மூன்றாம் இடங்களில் வெற்றி பெறும் மாணவ, மாணவியருக்கு முறையே ரூ.10,000, ரூ.7,000 மற்றும் ரூ.5,000 பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது.

2015–2016 ஆம் ஆண்டில் 11 மாணவ, மாணவியருக்கு ரூ.0.74 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 14.9 அரசு கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்/ ஆசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டம்

அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் 95 விழுக்காடு

மற்றும் அதற்கு அதிகமாக தேர்ச்சி பெற செய்யும் உயர்நிலை / மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தலா ரூ.10,000 பரிசுத்தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்கும் திட்டம் 2011–2012 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதேபோல் கள்ளர் சீரமைப்பு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு பாடப் பிரிவிலும் 100 விழுக்காடு மாணவ, மாணவியரை தேர்ச்சி பெறச் செய்யும் முதுகலைப் பட்டதாரி மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு தலா ரூ.5,000 பரிசுத் தொகை வழங்கும் திட்டம் 2014–2015 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

2015–2016 ஆம் ஆண்டில் 331 தலைமையாசிரியர்கள் / ஆசிரியர்களுக்கு ரூ.17.95 இலட்சம் பரிசுத்தொகைக்காக செலவிடப்பட்டுள்ளது.

2016–2017 ஆம் ஆண்டிற்கு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் மற்றும் தலைமையாசிரியர் / ஆசிரியர்களுக்கு பரிசு வழங்கும் திட்டங்களுக்காக ரூ.18 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 14.10 சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது

தமிழ்நாட்டில் சமூக நீதிக்காக சிறந்த முறையில் பங்காற்றியவர்களை சிறப்பு செய்யும் பொருட்டு சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது 1994 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இவ்விருது ஆண்டுதோறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்படும் ஒருவருக்கு வழங்கப்படுகிறது. இவ்விருது ஒரு சவரன் தங்கப் பதக்கமும், ரூ.1 இலட்சம் பொற்கிழியும் கொண்டதாகும். 2015 ஆம் ஆண்டு சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. வி.ஆர். வேங்கன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2016–2017 ஆம் ஆண்டிற்கு ரூ.1.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 15. பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள்

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மக்களின் பொருளாதார வளர்ச்சிக்காக விலையில்லா தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப்பெட்டிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்ட பயனாளிகளின் குடும்ப ஆண்டு வருமானம்

கிராமப்புறங்களில் ரூ.40,000—க்கு மிகாமலும், நகர்ப்புறங்களில் ரூ.60,000—க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

## 15.1 தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம்

2015—2016 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த 1,181 பயனாளிகளுக்கும் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 1,263 பயனாளிகளுக்கும் மொத்தம் ரூ.82.77 இலட்சம் செலவில் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் 2016—2017 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.40.00 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.42.80 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.82.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 15.2 சலவைப்பெட்டிகள் வழங்கும் திட்டம்

2015—2016 ஆம் ஆண்டில் 1,864 பயனாளிகளுக்கு ரூ.85 இலட்சம் செலவில் சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் 2016—2017 ஆம் ஆண்டிற்கு ரூ.85 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**16. வீட்டு மனைகள் வழங்குதல்**

வீடற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு விலையில்லா வீட்டு மனைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டப் பயனாளிகளின் ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் ரூ.40,000–க்கு மிகாமலும், நகர்ப்புறங்களில் ரூ.60,000–க்கு மிகாமலும் இருக்க வேண்டும். 2015–2016 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 656 பயனாளிகளுக்கு வீட்டுமனைகள் வழங்க ரூ.246.09 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2016–2017 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.200 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.150 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.350 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**17. நல வாரியங்கள்**

சீர்மரபினர் மற்றும் நரிக்குறவர் இனத்தவர்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக அரசு நல வாரியங்களை அமைத்துள்ளது. அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறையின் கீழ் இயங்கிவரும் நல வாரியங்களில்

வழங்கப்படுவதைப் போன்று, இவ்வாரிய உறுப்பினர்களுக்கு பல்வேறு நல உதவிகள் வழங்கப்படுகின்றன.

### 17.1 சீர்மரபினர் நல வாரியம்

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஒய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாரியத்திற்கென இதுவரை ரூ.200 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்**

| | | | |
|---|---|---|---|
| **1. விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ்** | | | |
| | அ) | விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை | ரூ.1,00,000 |
| | ஆ) | விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை |
| 2. | | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | ரூ.15,000 |
| 3. | | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை | ரூ.2,000 |
| **4. கல்வி உதவித்தொகை** | | | |
| | அ) | 10 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |

| | | | |
|---|---|---|---|
| | ஆ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு | ரூ.1,000 |
| | இ) | 11 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |
| | ஈ) | 12 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,500 |
| | உ) | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,500 |
| | ஊ) | (i) முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,500 |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,750 |
| | எ) | (i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.4,000 |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.5,000 |
| | ஏ) | (i) தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | ரூ.4,000 |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | ரூ.6,000 |
| | ஐ) | (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.6,000 |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.8,000 |
| | ஒ) | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,000 |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,200 |
| 5. | | திருமண உதவித்தொகை | ரூ.2,000 |

| 6. மகப்பேறு உதவித்தொகை | | | |
|---|---|---|---|
| | அ) | மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் 6 மாதங்களுக்கு | ரூ.6,000 |
| | ஆ) | கருச்சிதைவு /கருக்கலைப்பு | ரூ.3,000 |
| 7. | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ.500 வரை |
| 8. | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | ரூ.1,000 |

**31.03.2016** வரை இவ்வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு ரூ.**46.85** இலட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 17.2 தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

நரிக்குறவர்கள் தனிநபராகத் தொழில் துவங்க ரூ.**7,500** மானியமும், குழுவாகத் தொழில் துவங்க அதிகபட்சமாக ரூ.**1,25,000** பின்நிகழ்வு மானியமும் (Back ended subsidy) வழங்கப்படுகிறது.

இவ்வாரியத்திற்கென இதுவரை ரூ.740 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்**

| | | | |
|---|---|---|---|
| **1. விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ்** | | | |
| | அ | விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை | ரூ.1,00,000 |
| | ஆ | விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை |
| 2. | | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | ரூ.15,000 |
| 3. | | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை | ரூ.2,000 |
| **4. கல்வி உதவித்தொகை** | | | |
| | அ | ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு | ரூ.500 |
| | ஆ | 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு | ரூ.1,000 |
| | இ | 10ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |
| | ஈ | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,000 |
| | உ | 11 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |

| | | | |
|---|---|---|---|
| | ஊ | 12 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,500 |
| | எ | 12 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு | ரூ.1,500 |
| | ஏ | (i) முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,500 |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,750 |
| | ஐ | (i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.4,000 |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.5,000 |
| | ஒ | (i) தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | ரூ.4,000 |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | ரூ.6,000 |
| | ஓ | (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.6,000 |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.8,000 |
| | ஔ | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,000 |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,200 |

| | | | |
|---|---|---|---|
| 5. | | திருமண உதவித்தொகை | ரூ.2,000 |
| 6. | | **மகப்பேறு உதவித்தொகை** | |
| | அ | மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் 6 மாதங்களுக்கு | ரூ.6,000 |
| | ஆ | கருச்சிதைவு / கருக்கலைப்பு | ரூ.3,000 |
| 7. | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ.500 வரை |
| 8. | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | ரூ.1,000 |

**31.03.2016** வரை இவ்வாரியத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு **ரூ.624.36** இலட்சம் செலவில் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. **2016–2017** ஆம் ஆண்டிற்கு ரூ.**100** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 18. வன்னியர் பொதுச் சொத்து நல வாரியம்

தமிழ்நாட்டில், வன்னியர் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக, பல வன்னியர் வள்ளல்களால் உயிலாக எழுதி வைக்கப்பட்ட அறக்கட்டளைகளை அடையாளம் கண்டு, அவைகளை ஒருங்கிணைத்து, அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்காக, வன்னியர் பொதுச் சொத்து நலவாரியம் உருவாக்கப்பட்டது. இதுவரை **18** மாவட்டங்களில் உள்ள

79 வன்னியர் பொதுச் சொத்துக்கள் / அறக்கட்டளைகள் பற்றிய விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

## 19. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மக்கள் சுயதொழில் மேற்கொள்ள குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் நோக்கத்துடன் 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் நிறுவப்பட்டது. இது 1956 ஆம் ஆண்டு நிறுமச்சட்டத்தின் கீழ் பதிவுபெற்ற, ஒரு அரசுத்துறை நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.30 கோடியாகும். இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.12.27 கோடியாகும். இந்நிறுவனம், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக்கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. இக்கழகம் செயற்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து, அரசின் பொறுப்புறுதியின் மீது கடனாகப்பெற்று வழங்குகிறது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு சொந்த அலுவலக கட்டடம் கட்ட

எழும்பூர் வட்டத்தில், சர்வே எண்.465/10 (பகுதி) பிளாக் எண்.29—ல், மூன்று கிரவுண்ட் மற்றும் 154 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம், நில கிரயமின்றி தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு வழங்கப்பட்டு அந்நிலத்தில் இக்கழகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, கட்டடம் கட்டும்பணி தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 19.1 கடன் திட்டங்கள்

இக்கழகம் வழங்கும் கடனுதவியில், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக்கழகம், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் மற்றும் பயனாளியின் பங்குத்தொகை ஆகியவை அடங்கும். கடன் திட்டங்களுக்கான பயனாளிகளை, கூட்டுறவு சங்கங்களுக்கான இணைப்பதிவாளர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின நல அலுவலர், மாவட்ட தொழிற்மையத்தின் பொது மேலாளர் மற்றும் அந்தந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் ஆகியோரைக் கொண்ட குழு தெரிவு செய்யும். இக்கழகம் கூட்டுறவு வங்கிகள் / கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன் திட்டங்களுக்கான அனுமதி மற்றும் நிதியை பட்டுவாடா செய்கிறது.

கடன் திட்டங்களுக்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பு கிராமப்புறங்களில், ரூ.81,000–லிருந்து ரூ.98,000 ஆகவும், நகர்ப்புறங்களில் ரூ.1,03,000–லிருந்து ரூ.1,20,000 ஆகவும் 29.07.2015 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

### 19.1.1 பொது காலக்கடன் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் சிறு வணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வரை ஆண்டுக்கு 6 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. ரூ.5 இலட்சத்திற்கு மேல் ரூ.10 இலட்சம் வரை ஆண்டுக்கு 8 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்தும் கால அவகாசம் 3 முதல் 5 ஆண்டுகளாகும்.

### 19.1.2 பெண்களுக்கான புதிய பொற்காலத் திட்டம்

பெண்களின் சுயசார்பு பண்பினை வளர்க்கும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சிறு வணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூபாய் ஒரு இலட்சம் வரை ஆண்டுக்கு 5 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்தும் கால அவகாசம் 3 முதல் 5 ஆண்டுகளாகும்.

### 19.1.3 பெண்களுக்கான நுண் கடன் திட்டம் (மகிளா சம்ரிதி யோஜனா)

இத்திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.50,000 வரை ஆண்டுக்கு 4 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்தவேண்டிய கால அவகாசம் 3 ஆண்டுகளாகும்.

### 19.1.4 ஆண்களுக்கான நுண் கடன் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ஆண்கள் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.50,000 வரை ஆண்டுக்கு 5 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்தவேண்டிய கால அவகாசம் 3 ஆண்டுகளாகும்.

இத்திட்டங்களின் கீழ், 2015–2016 ஆம் ஆண்டில் 22,808 பயனாளிகளுக்கு ரூ.7,905.12 இலட்சம் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பயனாளிகள் எண்ணிக்கை | கடன்தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | நுண் கடன் திட்டங்கள் | 21,656 | 7,347.76 |
| 2 | பொதுக்கால கடன் திட்டம் | 910 | 437.43 |
| 3 | மகளிர் புதிய பொற்கால திட்டம் | 242 | 119.93 |
| மொத்தம் | | 22,808 | 7,905.12 |

**2016–2017** ஆம் ஆண்டிற்கு பல்வேறு திட்டங்களின் கீழ், ரூ.**10,000** இலட்சம் அளவில் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 19.2 சிறு, குறு விவசாயிகளுக்கான மானியம் மற்றும் கடன் திட்டம்

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகள் நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் / தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் உயர் அளவாக ரூ.**1,00,000** வரை **50** விழுக்காடு மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் அதிகபட்சம் ரூ.**50,000** அரசு மானியமாக வழங்கப்படுகிறது. இதுவரை **2,361** சிறு, குறு

விவசாயிகளுக்கு மானியமாக ரூ.**1,059.86** இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

**2012–2013** ஆம் ஆண்டு முதல் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் புதிய கடன் திட்டங்களான சிறு விவசாயிகள் மற்றும் காய்கறிகள் பயிரிடுவோருக்கான சிறு கடன் திட்டம், மரபுசார் கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கான சுய தொழில் காலக் கடன் திட்டம், இளம் தொழிற் பட்டதாரிக்கான காலக் கடன் திட்டம் ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## 20. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

இந்திரா சஹானி மற்றும் பிறர் – எதிர் – இந்திய யூனியன் மற்றும் பிறர் (J.T. 1992 (6) SC 273) என்கிற மண்டல் வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த வழிகாட்டுதல்களின்அடிப்படையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கூறு **16(4)**ன் கீழ், கூறு **340** உடன் படிக்கப்பட்டு, ஒரு நிலையான அமைப்பாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டு, **15.3.1993** அன்று முதல் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பணிகள் நீதிமுறை–சார்புடைய (quasi-judicial) தன்மை வாய்ந்தது. இவ்வாணையத்தின் செயல்–வரம்புகளாவன:-

(i) பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோருதல் தொடர்பான மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாகச் சேர்க்கப்பட்டிருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்தான முறையீடுகள் ஆகியவற்றைப் பெற்று, ஆய்வு செய்து மற்றும் அதன்மீது பரிந்துரைகளை ஆணையம் வழங்குதல்;

(ii) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்தல்;

(iii) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கூறு **16(4)** மற்றும் இதர பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும், இப்பொருள் தொடர்பாக உச்சநீதிமன்றம் எடுத்துள்ள பல்வேறு முடிவுகளையொட்டியும் ஆணையத்தின் பரிந்துரைகள் அமையவேண்டும்;

(iv) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருள்கள் பிறவற்றையும் ஆய்வுசெய்து பரிந்துரை வழங்குதல்;

இவ்வாணையம் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி, நீதியரசர் திரு.எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்கள் தலைமையில் **8** உறுப்பினர்களுடன், **28.12.2015** முதல் **3** ஆண்டுகள் பதவிக்காலத்துடன் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

## 21. <u>சிறுபான்மையினர் நலன்</u>

சிறுபான்மையின மக்களின் முன்னேற்றத்தில் தமிழ்நாடு நாட்டிலேயே முன்னிலை வகிக்கிறது. சிறுபான்மையின மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்களை இவ்வரசு திறம்பட செயல்படுத்தி வருகிறது.

### 21.1 தனி இடஒதுக்கீடு

தமிழ்நாட்டில், பிற்படுத்தப்பட்டோர் இனத்தவர்களுக்கான **30** விழுக்காடு இடஒதுக்கீட்டில், பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியர்களுக்கென **3.5** விழுக்காடு தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

## 21.2 கல்வி உதவித்தொகை

அரசு, அரசு உதவிபெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களிலும், ஒன்றாம் வகுப்பு முதல் தொழிற்கல்வி/ஆராய்ச்சி படிப்புகள் வரை பயிலும் கிறித்தவ, இஸ்லாமிய, சீக்கிய, புத்த, பார்சி மற்றும் ஜெயின் மதங்களைச் சார்ந்த சிறுபான்மையின மாணவ / மாணவியருக்கான, மைய அரசின், கீழ்க்கண்ட கல்வி உதவித்தொகை திட்டங்களை இவ்வரசு தொடர்ந்து செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

1. பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டம்
2. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டம்
3. தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை திட்டம்

முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில் 50 விழுக்காட்டிற்கு குறையாமல் மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவியர் இத்திட்டங்களின் கீழ் பயன்பெறலாம். இவர்களின் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு, பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்திற்கு ரூ.1 இலட்சத்திற்கு மிகாமலும், பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்திற்கு ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமலும்,

தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை திட்டத்திற்கு ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். இத்திட்டங்களின் கீழ் பயன்பெறுவோரின் மொத்த எண்ணிக்கையில், 30 விழுக்காடு மாணவியருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 21.2.1 பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை

இத்திட்டத்தின் கீழ் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ / மாணவியருக்கு, மைய அரசின் 100 விழுக்காடு நிதி பங்களிப்புடன் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு, ஆண்டொன்றுக்கு, சேர்க்கை கட்டணமாக ரூ.500 வரையிலும், கற்பிப்புக் கட்டணம் ரூ.3,500 வரையிலும் வழங்கப்படுகிறது. இது தவிர, 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு மாதம் ரூ.600 வீதமும், 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்காமல் பயில்வோருக்கு (Day Scholar) மாதம் ரூ.100 வீதமும், ஆண்டொன்றுக்கு அதிகபட்சம் 10 மாதங்களுக்கு பராமரிப்புக் கட்டணம் வழங்கப்படுகிறது.

**2015–2016** ஆம் ஆண்டில் **4,02,583** மாணவ, மாணவியருக்கு நேரடி பயன்மாற்று (DBT- Direct Benefit Transfer) முறை மூலம் கல்வி உதவித்தொகையாக ரூ.**4,557.39** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 21.2.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை

இத்திட்டத்தின் கீழ், பதினோறாம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு மைய அரசின் **100** சதவீத நிதி பங்களிப்புடன் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. பாடப்பிரிவிற்கு ஏற்றவாறு சேர்க்கை மற்றும் கற்பிப்புக் கட்டணமாக ரூ.**3,000** முதல் ரூ.**10,000** வரை வழங்கப்படுகிறது. விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு ரூ.**3,800** முதல் ரூ.**12,000** வரையிலும், விடுதிகளில் தங்காமல் பயில்வோருக்கு (Day Scholar) ரூ.**2,300** முதல் ரூ.**5,500** வரை பராமரிப்புக் கட்டணம் வழங்கப்படுகிறது.

**2015–2016** ஆம் ஆண்டில் **41,704** மாணவ, மாணவியருக்கு நேரடி பயன்மாற்று முறை மூலம் கல்வி உதவித்தொகையாக ரூ.**2,466.65** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 21.2.3 தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகைத் திட்டம்

சிறுபான்மையின மாணவ, மாணவியர் உயர் மதிப்பெண்கள் பெற்று தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்ப பிரிவுகளில் உயர்கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, மைய அரசின் 100 சதவீத நிதி பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கல்விக் கட்டணம், அதிகபட்சமாக ரூ.20,000 வரை அனைத்து மாணவ, மாணவியருக்கும் மீள வழங்கப்படுகிறது. விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு ரூ.10,000–மும், விடுதிகளில் தங்காமல் பயில்வோருக்கு (Day Scholar) ரூ.5000–மும் பராமரிப்புக் கட்டணமாக வழங்கப்படுகிறது.

2015–2016 ஆம் ஆண்டில் 5,227 மாணவ, மாணவியருக்கு நேரடி பயன்மாற்று முறை மூலம் கல்வி உதவித்தொகையாக ரூ.1,378.75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 21.3 விடுதிகள்

சிறுபான்மையின வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்கு கட்டணமில்லா உணவு மற்றும் உறைவிட வசதிகளுடன் 15 மாணவியர் விடுதிகளும், 1 மாணவர் விடுதியும் செயல்படுகின்றன. இதில், வேலூர் மாவட்டத்தில் 3 விடுதிகள்,

திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் தலா 2 விடுதிகள் மற்றும் திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், கோயம்புத்தூர், மதுரை, கிருஷ்ணகிரி, தஞ்சாவூர், கன்னியாகுமரி, சென்னை மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு விடுதியும் அடங்கும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளைப் போன்று, சிறுபான்மையின விடுதி மாணவ, மாணவியருக்கும் பாடப்புத்தகங்கள், சிறப்பு வழிகாட்டிகள், நான்கு இணைச் சீருடைகள், பாய்கள், போர்வைகள், எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் போன்றவை விலையில்லாமல் வழங்கப்படுகின்றன.

**2015–2016** ஆம் ஆண்டில் விடுதிகளின் உணவுக் கட்டணம், நிர்வாகச் செலவு மற்றும் பராமரிப்புக்காக ரூ.**216.47** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**2016–2017** ஆம் ஆண்டிற்கு ரூ.**234.75** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 21.4 விருதுகள் மற்றும் பரிசுகள்

ஆண்டுதோறும் **10** மற்றும் **12** ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறும் மாணவ /

மாணவியருக்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுத்தொகைகள் வழங்கப்படுகின்றன.

### 21.4.1 மாநில அளவிலான பரிசுகள்

12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில், முதல் மூன்று இடங்களில் தேர்ச்சி பெறும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த மூன்று மாணவர்கள் மற்றும் மூன்று மாணவியருக்கு முறையே ரூ.50,000, ரூ.30,000 மற்றும் ரூ.20,000 என்ற அளவில் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதேபோல் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில், முதல் மூன்று இடங்களில் தேர்ச்சி பெறும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த மூன்று மாணவர்கள் மற்றும் மூன்று மாணவியருக்கு முறையே ரூ.25,000, ரூ.20,000 மற்றும் ரூ.15,000 என்ற அளவில் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

### 21.4.2 மாவட்ட அளவிலான பரிசுகள்

12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில், முதல் மூன்று இடங்களில் தேர்ச்சி பெறும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த மூன்று மாணவர்கள் மற்றும் மூன்று மாணவியருக்கு முறையே ரூ.6,000, ரூ.4,000 மற்றும் ரூ.2,000 என்ற அளவில் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதேபோல் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில், முதல்

மூன்று இடங்களில் தேர்ச்சி பெறும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த மூன்று மாணவர்கள் மற்றும் மூன்று மாணவியருக்கு முறையே ரூ.3,000, ரூ.2,000 மற்றும் ரூ.1,000 என்ற அளவில் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

2015–2016 ஆம் ஆண்டில் 552 மாணவ / மாணவியர் பயனடையும் வகையில் ரூ.19.51 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2016–2017 ஆம் ஆண்டிற்கு ரூ.19.51 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 21.4.3 உருதுமொழி பயிலும் மாணவ, மாணவியருக்கான பரிசுத்திட்டம்

உருது மொழியினை முதல் அல்லது இரண்டாம் மொழியாக பயின்று 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில், முதல் மூன்று நிலைகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மூன்று மாணவர்கள் மற்றும் மூன்று மாணவியருக்கு முறையே ரூ.15,000, ரூ.10,000 மற்றும் ரூ.5,000 என்ற அளவில் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதேபோல் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று நிலைகளில் உயர் மதிப்பெண்கள் பெறும் மூன்று மாணவர்கள் மற்றும் மூன்று மாணவியருக்கு முறையே ரூ.10,000, ரூ.5,000 மற்றும் ரூ.3,000 என்ற அளவில் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

**2015–2016** ஆம் ஆண்டில் **13** சிறுபான்மையின மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.**1.06** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**2016–2017** ஆம் ஆண்டிற்கு ரூ.**0.96** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 21.5 முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம்

இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள ஆதரவற்ற, கணவரால் கைவிடப்பட்ட மற்றும் வயதான பெண்களுக்கு உதவிடும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவரை பதவி வழி தலைவராக கொண்டு மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் நன்கொடை மூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப **2011–2012** ஆம் ஆண்டு வரை **1 : 1** என்ற விகிதாச்சாரத்தில் ஆண்டொன்றுக்கு ரூ.**10** இலட்சம் வரை இணைமானியத் தொகை அரசால் வழங்கப்பட்டு வந்தது. இந்த இணைமானியத் தொகை **2012–2013** ஆம் ஆண்டு முதல் இரு மடங்காக உயர்த்தப்பட்டு **1 : 2** என்ற விகிதாச்சாரத்தில் ஆண்டிற்கு ரூ.**20** இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் ஆதரவற்ற, வயதான முஸ்லீம் விதவைகள் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லீம் மகளிர் ஆகியோர்களுக்கு உதவிடும் வகையில், தையல் பூ–வேலைப்பாடுகள், காலணிகள், கைவினைப் பொருட்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப இதர பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

2015–2016 ஆம் ஆண்டில் இணைமானியமாக ரூ.165.84 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

2016–2017 ஆம் ஆண்டிற்கு ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்கள் திரட்டும் நன்கொடைகளுக்கு ஏற்ப இணை மானியத்தினை இருமடங்காக வழங்குவதற்கான அரசின் ஒதுக்கீடு அதிகரிக்கப்படும்.

**21.6 பாரதப்பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம்**

சிறுபான்மையினரின் மக்கட்தொகைக்கேற்ப பொருளாதார மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ் நியாயமான பங்கு சிறுபான்மையின மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்திடும் வகையில் பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறுபான்மையின மக்களுக்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட சேவைகளின் பயன், வேலைவாய்ப்புகள், கல்வி உதவித்தொகை வழங்குதல், சுய வேலை வாய்ப்புத் திட்டம், தொழில் நுட்பப் பயிற்சிகள் மூலம் திறனை மேம்படுத்துதல், மாநில மற்றும் மைய அரசின் கீழ் வேலைவாய்ப்பு, சிறுபான்மையினர் வசிக்கும் குடிசைப் பகுதிகளின் நிலையை மேம்படச் செய்தல், இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு உதவி வழங்குதல், இனக்கலவரங்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் சீரிய நோக்கங்கள் ஆகும்.

இத்திட்டம் முறையாக செயலாக்கப்படுவதைக் கண்காணிக்க மாநில அளவில் தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழுவும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் ஒரு குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 21.7 மறுவாழ்வு நிதி உதவித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், இனக்கலவரங்களால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட சிறுபான்மையினர் மற்றும் சிறு குற்றங்களுக்காக தண்டனைப் பெற்று சிறையிலிருந்து வெளிவந்த சிறுபான்மையினத்தைச் சார்ந்தவர்கள், சிறுதொழில்

மேற்கொள்ள குடும்பம் ஒன்றிற்கு ரூ.10,000 வரை நிதியுதவி வழங்கப்படுகிறது.

## 21.8 உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியம்

பள்ளிவாசல்கள், மதரசாக்கள், தர்க்காக்கள், ஆஷூர்கானாக்கள், அடக்கத்தலங்கள், தைக்காக்கள், முஸ்லீம் அனாதை இல்லங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் உலமாக்கள், ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள்/ஆசிரியைகள், மோதினார்கள், பிலால் மற்றும் பிற பணியாளர்களின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் உருவாக்கப்பட்டுள்ளது. **13,464** நபர்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்**

| | | | |
|---|---|---|---|
| **1. விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ்** | | | |
| | அ) | விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை | ரூ.1,00,000 |
| | ஆ) | விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை |

| | | | |
|---|---|---|---|
| 2. | | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | ரூ.15,000 |
| 3. | | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை | ரூ.2,000 |
| 4. கல்வி உதவித்தொகை | | | |
| | அ) | 10 ஆம் வகுப்பு படித்துவரும் மாணவியருக்கு | ரூ.1,000 |
| | ஆ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்ற மாணவியருக்கு | ரூ.1,000 |
| | இ) | 11 ஆம் வகுப்பு படித்துவரும் மாணவியருக்கு | ரூ.1,000 |
| | ஈ) | 12 ஆம் வகுப்பு படித்துவரும் மாணவியருக்கு | ரூ.1,500 |
| | உ) | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,500 |
| | ஊ) | (i) முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,500 |
| | | (ii) விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,750 |
| | எ) | (i) முறையான பட்டமேற்படிப்பிற்கு | ரூ.4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் முறையான பட்டமேற்படிப்பிற்கு | ரூ.5,000 |
| | ஏ) | (i) தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | ரூ.4,000 |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற் கல்வி பட்டப்படிப்பிற்கு | ரூ.6,000 |
| | ஐ) | (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.6,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற் கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.8,000 |
| | ஒ) | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,200 |
| 5. | | திருமண உதவித்தொகை | ரூ.2,000 |
| 6. மகப்பேறு உதவித்தொகை | | | |
| | அ) | மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் 6 மாதங்களுக்கு | ரூ.6,000 |
| | ஆ) | கருச்சிதைவு /கருக்கலைப்பு | ரூ.3,000 |
| 7. | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ.500 வரை |
| 8. | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | ரூ.1,000 |

இவ்வாரியத்தின் மூலம் மேற்கண்ட நலத் திட்டங்களுக்காக இதுவரை **2,957** பயனாளிகளுக்கு ரூ.**67.33** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 21.9 ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியுதவி

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்துவ பிரிவினரும் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனிதப் பயணம் செல்வதற்கு நிதியுதவி வழங்கும் திட்டம் 2011–2012 ஆம் ஆண்டில் இவ்வரசால் துவங்கப்பட்டு ஆண்டிற்கு 500 பயனாளிகளுக்கு தலா ரூ.20,000 வீதம் ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதுவரை மொத்தம் 2,340 கிறித்துவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

2016–2017 ஆம் ஆண்டிற்கு ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 22. <u>தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்</u>

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், மதவழி மற்றும் மொழிவழி சிறுபான்மையினர் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு அமைக்கப்பட்ட சட்டபூர்வமான அமைப்பாகும்.

இந்த ஆணையம் சிறுபான்மையினத்தவரை பாதுகாத்திட இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் மாநில அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களின் மூலம் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் செயல்படும் விதத்தை ஆய்வு

செய்தல், கண்காணித்தல், சிறுபான்மையினர் தொடர்பாக அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் சட்டம் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து உரிய கருத்துக்களைத் தெரிவித்தல், மாநிலத்தில் மத நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதலுக்கான வழிவகைகளை அரசுக்குப் பரிந்துரைத்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்கிறது.

தற்போதைய ஆணையம், பேராயர் டாக்டர் எம்.பிரகாஷ் அவர்களை தலைவராகக் கொண்டு **6** உறுப்பினர்களுடன் **01.01.2016** முதல் மூன்றாண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

## 23. <u>தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்</u>

தமிழ்நாட்டில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், புத்த மதத்தினர், சீக்கியர்கள், பார்சீயர்கள் மற்றும் ஜெயின் பிரிவைச் சார்ந்த மதவழி சிறுபான்மையின மக்கள் சுயதொழில் மேற்கொள்ள குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் நிறுவப்பட்டது. இது **1956** ஆம் ஆண்டு நிறுமச்சட்டத்தின் கீழ் பதிவுபெற்ற, ஒரு அரசுத்துறை நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.**5** கோடியாகும். இதன்

செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.**2.05** கோடியாகும். இந்நிறுவனம், தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக்கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. இக்கழகம் செயற்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, மாநில அரசின் பொறுப்புறுதியின் மீது தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக்கழகத்திடமிருந்து கடனாகப்பெற்று வழங்குகிறது.

## 23.1 கடன் திட்டங்கள்

இக்கழகம் வழங்கும் கடனுதவியில், தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக்கழகம், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் மற்றும் பயனாளியின் பங்குத்தொகை ஆகியவை அடங்கும். இக்கழகம் கூட்டுறவு வங்கிகள் / கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன் திட்டங்களுக்கான அனுமதி மற்றும் நிதியை பட்டுவாடா செய்கிறது.

### 23.1.1 தனி நபர் கடன் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் ரூ.**81,000**–க்கு மிகாமலும், நகர்ப்புறங்களில் ரூ.**1,03,000**–க்கு மிகாமலும் உள்ள சிறுபான்மையினருக்கு, ரூ.**50,000** வரை ஆண்டிற்கு **5** விழுக்காடு வட்டி விகிதத்திலும்,

ரூ.50,001–லிருந்து ரூ.20 இலட்சம் வரை ஆண்டிற்கு 6 விழுக்காடு என்ற வட்டி விகிதத்திலும் கடன் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. கடனை 3 முதல் 5 ஆண்டுகளுக்குள் திரும்ப செலுத்தவேண்டும்.

ஆண்டு வருமானம் ரூ.1.03 இலட்சத்திற்கு மேற்பட்டு ரூ.6 இலட்சம் வரையில் உள்ள சிறுபான்மையினருக்கு, ஆண் பயனாளிகளுக்கு ஆண்டிற்கு 8 விழுக்காடு வட்டி விகிதத்திலும் மற்றும் பெண் பயனாளிகளுக்கு 6 விழுக்காடு வட்டி விகிதத்திலும் ரூ.30 இலட்சம் வரை கடன் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆவின் நிறுவனம் மூலமாக, ஆண்டிற்கு 6 விழுக்காடு வட்டி விகிதத்தில் இரண்டு கலப்பினப் பசுக்கள் வாங்குவதற்கு ரூ.50,000 அல்லது இரண்டு உயர்ரக எருமைகள் வாங்குவதற்கு ரூ.70,000 கடன் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2015–2016 ஆம் ஆண்டில் 492 பயனாளிகளுக்கு ரூ.324.70 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

### 23.1.2 சுய உதவி குழுக்கள் மூலம் சிறுகடன் வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், சுய உதவி குழு உறுப்பினர்கள், சிறுதொழில் மேற்கொள்ள கடன் வழங்கப்படுகிறது.

கிராமப்புறங்களில் ரூ.81,000–க்கு மிகாமலும், நகர்ப்புறங்களில் ரூ.1,03,000–க்கு மிகாமலும் ஆண்டு வருமானமுள்ள சிறுபான்மையின ஆண் / பெண் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு பலகாரக்கடை, காலணி விற்பனை செய்தல், சிற்றுண்டி, ஜவுளி வியாபாரம், ஊறுகாய் மற்றும் அப்பளம் தயாரித்து விற்பனை செய்தல், கூடை பின்னுதல் போன்ற சிறு தொழில் மேற்கொள்ள, உறுப்பினர் ஒருவருக்கு ரூ.1,00,000 வரை ஆண்டுக்கு 7 விழுக்காடு என்ற வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது.

ஆண்டு வருமானம் ரூ.1.03 இலட்சத்திற்கு மேல் ரூ.6 இலட்சம் வரை உள்ள சிறுபான்மையினருக்கு ஆண்களுக்கு ஆண்டுக்கு 10 விழுக்காடு வட்டி விகிதத்திலும், பெண்களுக்கு 8 விழுக்காடு வட்டி விகிதத்திலும் ரூ.1,50,000 வரை கடன் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2015–2016 ஆம் ஆண்டில், சுய உதவிக் குழுக்கள் மூலம் 6,858 பயனாளிகளுக்கு ரூ.2,648.43 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

### 23.1.3 கல்விக் கடன்

பெற்றோரது ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் ரூ.81,000–க்கு மிகாமலும், நகர்ப்புறங்களில் ரூ.1,03,000–க்கு

மிகாமலும் உள்ள சிறுபான்மையின மாணவ / மாணவியர், குறுகிய கால உயர்திறன் வளர்ச்சி கல்வி, தொழிற் கல்வி (இளங்கலை / முதுகலை) பட்டப்படிப்பு, வேலைவாய்ப்பு பட்டப்படிப்புகள் பயில ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ.3 இலட்சம் என்ற அளவில் அதிகபட்சம் ரூ.15 இலட்சம் வரை 3 விழுக்காடு வட்டி விகிதத்தில் கல்விக் கடன் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் பயிலும் சிறுபான்மையின மாணவ / மாணவியருக்கு மேற்காணும் வருமான வரம்புக்குட்பட்டு, ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ.4 இலட்சம் என்ற அளவில் 5 ஆண்டுகளுக்கு அதிகபட்சம் ரூ.20 இலட்சம் வரை 3 விழுக்காடு வட்டியில் கல்விக் கடன் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.1.03 இலட்சத்திற்கு மேல் ரூ.6 இலட்சம் வரை உள்ள சிறுபான்மையின மாணவ, மாணவியர் இந்தியாவில் தொழிற்கல்வி பயில ஒரு கல்வியாண்டிற்கு ரூ.4 இலட்சம் என்ற அளவில், அதிகபட்சம் 5 ஆண்டுகளுக்கு ரூ.20 இலட்சம் வரையிலும், வெளிநாட்டில் தொழிற் கல்வி பயில்பவர்களுக்கு ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிகபட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு ரூ.30 இலட்சம் வரையிலும், ஆண் பயனாளிகளுக்கு ஆண்டுக்கு

8 விழுக்காடு வட்டி விகிதத்திலும் மற்றும் பெண் பயனாளிகளுக்கு ஆண்டுக்கு 5 விழுக்காடு வட்டி விகிதத்திலும் கடன் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 24. <u>தமிழ்நாடு வக்ஃப் வாரியம்</u>

வக்ஃப் சொத்துக்களை சரியான முறையில் பராமரிப்பதற்காகவும், வக்ஃப் தொடர்பான அலுவல்களை நிர்வகிப்பதற்காகவும் 1995 ஆம் ஆண்டு வக்ஃப் சட்டம் (மத்திய அரசு சட்டம் 43/1995) இயற்றப்பட்டு 01.01.1996 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தில் உள்ள அறிவுரைகளின்படி தமிழ்நாடு வக்ஃப் வாரியம் அமைக்கப்பட்டு முறையாக 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படுகிறது.

2013 ஆம் ஆண்டில், வக்ஃப் சட்டம் 1995–க்கு சில திருத்தங்கள் செய்யப்பட்டு, இதில் வக்ஃப் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டல், விற்பனை மற்றும் தானம் செய்வதற்கு தடை விதித்தல், மேலும் அச்சொத்துக்கள் மேம்பாடு அடைய வழி வகுத்தல் போன்ற சில முக்கிய இனங்களில் சிறந்த முறையில் தீர்வு காணும் வகையில் புதிய அம்சங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

வக்ஃப்கள் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் தொடர்பாக எழும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஏதுவாக **25** மாவட்டங்களில் சார்பு நீதிமன்றங்கள் வக்ஃப் தீர்ப்பாயங்களாகச் செயல்பட்டு வருகின்றன. மேலும், தமிழ்நாட்டில் உள்ள வக்ஃப் சொத்துக்களை முழுமையாக அளவை செய்து கணக்கிடுவதற்கு நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர் தலைமையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 24.1 நிர்வாக மானியம்

வக்ஃப் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் சகாயத் தொகை வருவாயிலிருந்து தமிழ்நாடு வக்ஃப் வாரிய நிர்வாகச் செலவுகளை எதிர்கொள்ள இயலாமல் பற்றாக்குறை ஏற்படுகிறது. தமிழக அரசு இப்பற்றாக்குறையை ஈடு செய்ய நிர்வாக மானியம் வழங்கி வருகிறது. தமிழக அரசு **2011–2012** ஆம் ஆண்டிலிருந்து நிர்வாக மானியத்தை ரூ.**45** இலட்சத்திலிருந்து ரூ.**1** கோடியாக உயர்த்தி வழங்கி வருகிறது. **2016–2017** ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு அரசு நிர்வாக மானியமாக ரூ.**1** கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

## 24.2 உலமா ஓய்வூதிய திட்டம்

**1981** ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் உலமா ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள

வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற வறிய நிலையில் உள்ள பேஷ் இமாம், மோதினார், அரபி ஆசிரியர் மற்றும் முஜாவர் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் உலமா ஓய்வூதியம் பெறுவதற்கு **60** வயது நிரம்பிய மற்றும் **20** ஆண்டுகள் பணியாற்றியவர்கள் தகுதியுள்ளவர்களாவர். **2010–2011** ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தில் பயனாளிகள் எண்ணிக்கை **2,400** ஆக இருந்தது. **2011–2012** ஆம் ஆண்டில் இத்திட்ட பயனாளிகளின் எண்ணிக்கை **2,600** ஆக உயர்த்தப்பட்டுள்ளது. உலமா ஓய்வூதிய தொகையும் மாதம் ரூ.**750**–லிருந்து மாதம் ரூ.**1,000** ஆக உயர்த்தப்பட்டது. **2016–2017** ஆம் ஆண்டு முதல் உலமா ஓய்வூதியம் மாதமொன்றுக்கு ரூ.**1,000**–லிருந்து ரூ.**1,500** ஆக உயர்த்தப்படவுள்ளது.

## 24.3 மணவிலக்குப் பெற்ற முஸ்லீம் பெண்களுக்கான வாழ்க்கைச் செலவு மானியம்

முஸ்லீம் பெண்கள் (மணவிலக்கில் உரிமை பாதுகாப்பு) சட்டம் **1986** பிரிவு **4(2)**–ன்படி, மணவிலக்கு பெற்ற முஸ்லீம் பெண்களுக்கு நீதிமன்ற தீர்ப்பின்படி தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் வாழ்க்கைச் செலவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் வழங்கப்படும்

இத்தொகையினை வாரியத்திற்கு மானியமாக அரசு வழங்கி வருகிறது.

**24.4 பெரிய அளவிலான பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு மானியம்**

பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களை புனரமைப்பதற்காக தமிழ்நாடு அரசு பெரிய அளவிலான புனரமைப்பு மானியம் வழங்கி வருகிறது. 2016–2017 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கான மானியமாக ரூ.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**24.5 வக்ஃப் நிறுவனங்கள் மேம்பாட்டு நிதி**

2012–2013 ஆம் ஆண்டில் இந்த அரசு புதிதாக "வக்ஃப் நிறுவனங்கள் மேம்பாட்டு நிதி" ஒன்றினை ஆரம்பித்து நன்கொடை வசூலித்து வக்ஃப் நிறுவனங்களுக்கு சொந்தமான கட்டடங்களில் பெரும் பழுதுகள் நீக்கவும், சீரமைக்கவும் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிதிக்கு அரசின் மானியமாக 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.3 கோடி வழங்கப்பட்டது.

# 25. தமிழ்நாடு மாநில ஹஜ் குழு

## 25.1 குழுவின் அமைப்பு

இந்திய ஹஜ் குழு மற்றும் புதுதில்லி, வெளிவிவகாரத்துறை அமைச்சகம் ஆகியவற்றின் வழிகாட்டுதலுடன் ஹஜ் புனிதப் பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் மற்றும் ஹஜ் பயணிகளின் நலன் குறித்த பணிகளை மேற்கொள்வதற்கும் ஹஜ் குழு சட்டம், 2002 (மத்திய சட்டம் எண்.35/2002)–ன்படி மூன்று ஆண்டு காலத்திற்கு தமிழ் நாடு மாநில ஹஜ் குழு, மாநில அரசால் அமைக்கப்படுகிறது.

## 25.2 குழுவின் பணிகள்

இக்குழுவின் முக்கியப் பணிகள் பின்வருமாறு:–

1. தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளிடமிருந்து ஹஜ் பயணத்திற்கான விண்ணப்பங்களைப் பெறுதல், ஹஜ் பயணத்திற்கான நபர்களை கணினி மென்பொருளைப் பயன்படுத்தி குலுக்கல் முறையில் தேர்வு செய்தல்.

2. இந்திய ஹஜ் குழு, மும்பைக்கு செலுத்தவேண்டிய ஹஜ் முன்பணக் கட்டணம், மீதமுள்ள ஹஜ் தொகை, விமானக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் குறித்த அறிவுரைகளை அவ்வப்போது பயணிகளுக்கு அளித்தல்.

3. மக்கா மற்றும் மதீனாவில் இந்திய உதவித் தூதரகத்தின் ஒருங்கிணைப்போடு தகுந்த தங்குமிடங்களைத் தெரிவு செய்வதற்காக அலுவலர்களை கட்டடத் தேர்வுக் குழுவில் சவூதி அரேபியாவிற்கு அனுப்புதல்.

4. தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹாஜிகள் சவூதி அரேபியாவில் தங்கியிருக்கும் காலத்தில், ஹஜ் பயணிகளின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு ஹஜ் தொண்டர்களை அனுப்புதல்.

5. ஹஜ் பயணிகளுக்கு கடவுச் சீட்டுகளைப் பெறுவதற்காக மண்டல கடவுச் சீட்டு அலுவலகங்களுடன் தேவைப்படும்போது ஒன்றிணைந்து பணிபுரிதல்.

6. ஒவ்வொரு வருடமும் தமிழ் மொழியில் ''ஹஜ்ஜும் உம்ராவும்'' என்ற கையேடு அச்சிட்டு ஹஜ் பயணிகளுக்கு விலையேதுமின்றி வழங்குதல்.

7. சென்னை–ஜித்தா / மதீனா–சென்னைக்கு ஹஜ் விமானங்கள் இயக்கத்தின்போது வெளிமாவட்டப் பயணிகளுக்கு தற்காலிகத் தங்கும் வசதி ஏற்படுத்துதல் மற்றும் தங்குமிடத்திலிருந்து விமான நிலையம் மற்றும் திரும்பி வருவதற்கு போக்குவரத்து வசதி அளித்தல் முதலியன.

8. ஹஜ் பயணத்தின்போது பின்பற்ற வேண்டிய பயண நடைமுறை மற்றும் செயல்முறைகள் குறித்து தேர்ந்தெடுக்கப்பட்ட பயணிகளுக்கு பயிற்றுவிக்க பல்வேறு மாவட்ட / வட்ட தலைமையகங்களில் புத்தறிவுப் பயிற்சி முகாம்களை நடத்துதல்.

9. மூளைக்காய்ச்சல் தடுப்பூசி போடுவதற்கான நிகழ்ச்சிகளை ஹஜ் பயணிகளின் எண்ணிக்கைக்கேற்ப பல்வேறு மாவட்டங்களில் நடத்துதல்.

10. மக்கா மற்றும் மதினா நகரங்களில் ஹஜ் பயணிகளுக்குத் தங்குமிட வசதிகளை ஏற்படுத்துதல்.

11. ஹஜ் விமானங்கள் இயக்கம் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் அமைய மைய மற்றும் மாநில அரசு, இந்திய ஹஜ் குழு, மும்பை முதலான பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களான, இந்திய விமானங்களின் ஆணைக்குழு, சுங்கம், குடியேற்றம், விமான போக்குவரத்துப் பாதுகாப்பு நிறுவனம், விமான நிறுவனங்கள் ஆகியவற்றுடனும் மற்றும் இதர தொண்டு நிறுவனங்களுடனும் சேவைகளை ஒருங்கிணைத்தல்.

12. ஹஜ் பயணம் தொடர்பான இதர இடைநிகழ்வுப் பணிகள்.

**25.3 குழுவிற்கான நிர்வாக மானியம்**

மாநில ஹஜ் குழுவிற்கு ஆண்டுதோறும் நிர்வாக மானியத்தை தமிழக அரசு வழங்கி வருகிறது. பணியாளர்களுக்கு ஊதியம் அளித்தல், சொத்து வரி, மின்சார செலவினம், குடிநீர் மற்றும் வடிகால் வரி முதலிய நிருவாக செலவினங்களை தமிழக அரசால் அளிக்கப்படும் மானியத்திலிருந்து தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மேற்கொள்கிறது. 2013–2014 ஆம் ஆண்டு முதல் இம்மானியம் ரூ.20 இலட்சத்திலிருந்து, ரூ.30 இலட்சமாக தமிழக அரசால் உயர்த்தப்பட்டது. 2016–2017 ஆம் ஆண்டிற்கு நிர்வாக மானியமாக ரூ.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**25.4 ஹஜ் தொண்டர்கள் மற்றும் கட்டடத் தேர்வு குழுவில் அலுவலர்களை அனுப்புவதற்கு மானியத்தை ஒப்பளிப்பு செய்தல்**

ஹஜ் பயணிகளுக்கு சேவையாற்ற ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும், ஹஜ் பயணிகள் தங்கும் வசதிகளுக்காகக் கட்டடங்களைத் தெரிவு செய்ய கட்டடத்தேர்வுக் குழுவில் பிரதிநிதியை அனுப்புவதற்குண்டான செலவினத்தை மேற்கொள்ளவும், அரசு, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு மானியங்களை அளிக்கிறது. இத்திட்டத்திற்கென,

2016–2017 ஆம் ஆண்டில் ரூ.10.29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முடிவுரை**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி இத்துறை பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோரின் வாழ்க்கை தரத்தினை முன்னேற்றுவதற்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இப்பிரிவு மக்களின் சமூக, கல்வி, பொருளாதார மேம்பாட்டிற்கான முயற்சிகளை இவ்வரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

**எஸ். வளர்மதி**
**பிற்படுத்தப்பட்டோர் மற்றும்**
**சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்**


# இணைப்பு

## 2016-2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| துறை | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தலைமைச் செயலகம் | 476.29 | -- | 0.01 | 476.30 |
| வக்ஃப் மற்றும் ஹஜ் குழு | 517.09 | -- | -- | 517.09 |
| பிற்படுத்தப்பட்டோர் நலன் | 47167.93 | 4058.07 | -- | 51226.00 |
| மிகப்பிற்படுத்தப்–பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 45325.92 | 6171.15 | -- | 51497.07 |
| தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | 138.63 | -- | -- | 138.63 |
| மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 51.78 | -- | -- | 51.78 |
| சிறுபான்மையினர் நலன் | 512.42 | 345.55 | -- | 857.97 |
| மொத்தம் | 94190.06 | 10574.77 | 0.01 | 104764.84 |

# இட ஒதுக்கீடு விவரம்



# பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள் (731)



# மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகள் (591)



# சிறுபான்மையினர் விடுதிகள் (16)



# மாவட்ட வாரியான விடுதிகள் விவரம் (1338)

